**தலைப்பு 150 – பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 150 – பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 21 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்கென ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 4,843.98 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டின் முடிவளவில் அதில் ரூபா 4,743.80 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிகர நிதியில்ல் ரூபா 100.17 மில்லியன் அல்லது 2.07 சதவீதம் சேமிப்புக்குள்ளாகியது. விபரம் வருமாறு.

| **செலவினம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | | | **தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புகள்** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதிஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்புகள்** | |
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| மீண்டுவருபவை | 4,653.98 | 4,652.78 | 1.20 | 0.03 |

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதனம் | 190.00 | 91.03 | 98.97 | 52.09 |
| மொத்தம் | 4,843.98 | 4,743.81 | 100.17 | 2.07 |

### 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்டதும் உள்ளவாறானதுமான வருமானம்**

அமைச்சானது 2015 ஆம் ஆண்டிற்கென 20.03.02.21 எனும் வருமானச் குறியீட்டுக்கான மதிப்பீட்டைத் தயாரித்திருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டின்போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 21.15 மில்லியனாகும்.

### 2.3 முற்பணக் கணக்கு

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 15001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்குப் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் மற்றும் உள்ளவாறான பெறுமதியும் வருமாறு.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 3.50 | 2.60 | 0.02 | 5.23 | 20.00 | 7.85 |

### 2.4 கட்டு நிதிக் கணக்கு

அமைச்சின் கீழான 7002/0000/000/0437/0015/000 இலக்கக் கட்டு நிதியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டு நிதி மீதி ரூபா 1.09 மில்லியன் ஆகும்.

### 2.5 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழான 6000/0000/00/0018/0086/000 இலக்க வைப்புக் கணக்கின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 0.23 மில்லியன் ஆகும்.

### 2.6 கணக்காய்வு அவதானிப்பு

பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்படும்

கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

2002 நவெம்பர் 28 ஆந் திகதிய 1A1/2002/2 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், அமைச்சினால் கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென் அணிகள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீடு

நான்கு செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 4,070,000 கூட்டுத் தொகையுடைய மொத்த நிகர நிதி சேமிப்புக்குள்ளாகியிருந்தது.

### 3.3 கட்டு நிதிக் கணக்கு

2015 ஜுலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்டவாறான நிதிப் பிரமாணம் 371(2) இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு முரணாக 4 நிறைவேற்றுதரத்தைச் சாராத உத்தியோகத்தர்களுக்கு 9 சந்தர்ப்பங்களில் ரூபா 120,000 வேலை நிமித்தக் கட்டு நிதி வழங்கப்பட்டிருந்தது.

### 3.4 வருமானக் கணக்கு

அமைச்சினது செயலாளருக்கு வருமானக் கணக்களிப்பு உத்தியோகத்தர் எனும் வகையில் 20.03.02.01 ஆம் இலக்க வருமானக் குறியீட்டுக்கு வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கிலிடுதல், கணக்குகளைச் சமர்ப்பித்தல் ஆகிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவ்வருமானக் குறியீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டுக்கான வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 21.15 மில்லியன் வருமானமாகச் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் வருமான நிலுவை தொடர்பான அரையாண்டு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குக் குறித்த தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உராய்வு நீக்கிகளை இறக்குமதி செய்தல் தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2013 முதல் 2018 ஆம் அண்டு காலப்பகுதிக்குக் கம்பனி ஒன்றுடன் புதிய உடன்படிக்கை செய்துகொண்டபோதும், அதன் பொருட்டு 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான பெற வேண்டிய ரூபா 5 மில்லியனுக்கான உராய்வு நீக்கி அனுமதிப் பத்திரக் கட்டணத்தை 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் சேகரிப்பதற்கு அமைச்சினால் இயலாது போனதுடன் வருமானக் கணக்கில் வருமான நிலுவையாகவும் அதனைக் காட்டியிருக்கவில்லை.

(ஈ) உராய்வு நீக்கிகளது இறக்குமதி தொடர்பாக அமைச்சுடன் உடன்படிக்கை செய்து கொண்ட நிறுவனங்களது விபரம் அடங்கிய பதிவேடு ஒன்றை அமைச்சு பேணியிருக்கவில்லை.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

விடய இலக்கம் 15001 – அரசாங்க உத்தியோக்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது, அமைச்சில் பணியாற்றி 2012 ஆம் ஆண்டில் சேவை விலகிய சாரதி ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 74,634 கூட்டுத் தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சு மீளாய்வாண்டு முடிவளவிலும் தவறியிருந்தது.

## 3.6 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 3.6.1 வருடாந்த பெருகைத் திட்டம்

அரசாங்க பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டு பண்டங்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்வதற்கு வருடாந்தப் பாதீட்டின் பிரகாரம் ரூபா 172 மில்லியன் நிதியேற்பாடும் குறை நிரப்பு பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 18 மில்லியனுக்கான நிதியேற்பாடும் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்துவதற்கு 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 133 ஆம் நிதிப் பிரமாணம் மற்றும் 1998 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 1A/98/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் சகல நிறுவனங்களும் நோக்கெல்லைக்குரிய உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் தொடர்பாகவும் பிரதான கணக்களி உத்தியோகத்தருக்குப் பொறுப்புக்கூற வேண்டிய சிரேஷ்ட கணக்காளர் ஒருவரது தலைமைத்துவடனான உள்ளகக் கணக்காய்வுக்கூறு ஒன்று நிறுவப்பட வேண்டுமாயினும், 2015 ஆம் ஆண்டின்போது உள்ளகக் கணக்காய்வுக்கூறு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

### 3.6.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு

2015 ஆம் ஆண்டின்போது ஒரு தடைவ மாத்திரமே கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் மாத்திரமே நடைபெற்றிருந்தது.

### 3.6.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்டம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் அமைச்சு செயலாற்றல் அறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டுமாயினும், அவ்வறிக்கை 2016 ஜுலை 05 ஆந் திகதியன்றும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சினது சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் குறைவுகளாக இனங்காணப்பட்டிருந்த 09 வகையான 20 பொருட்களைக் குறித்தவர்களிடமிருந்து திருப்பிப் பெற்றிருக்கவில்லை.

**(ஆ) வெளிநபர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 407,900 பெறுமதியான 04 வகைப் பொருட்களும், பெறுமதி சமர்ப்பிக்கப்படாத 22 வகையான 102 பொருட்களும் அமைச்சிற்குத் திருப்பிக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) மற்றுமொரு நிறுவனத்தினது சொத்துக்களை முறையற்றவாறு பயன்படுத்தல்**

2010 மே 14 ஆந் திகதிய சீஎ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரது அரசாங்கச் செலவின முகாமைத்துவம் தொடர்பான கடிதத்தின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சரது அல்லது பிரதி அமைச்சரது பாவனைக்கென அரச கூட்டுத்தாபனத்தினதோ அல்லது நியதிச்சட்ட நிறுவத்தினதோ அல்லது அரச கம்பனி ஒன்றினது வாகனத்தைப் பயன்படுத்துவதாயின், நிதி, திட்டமிடல் அமைச்சின் முன் கூட்டிய அங்கீகாரத்தைப் பெறவேண்டுமாயினும், அமைச்சினால் அங்கீகாரமின்றி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 03 வாகனங்களை 2015 ஆம் ஆண்டின் போது அமைச்சு பெற்றிருந்தது.

## 3.8 உள்ளூர் நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்குதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்டத் தாமதம் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளியாகிய சில சந்தர்ப்பங்கள் வருமாறு.

**(அ) சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை**

1969 ஆம் ஆண்டின் போது, நிறுவப்பட்டு 46 ஆண்டுகள் பழமை வாய்ந்திருந்த சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நாட்டில் அதிகரித்து வரும் பெற்றோலிய உற்பத்தித் தேவைகளை வழங்குவதற்கு ஆற்றல் அற்று இருந்தது. மிகவும் குறைந்த கிரயத்தில் எரிபொருளை உற்பத்தி செய்வதற்கான வசதியையுடைய மற்றும் அதன் மூலம் எண்ணெய்ச் சுத்திகரிப்புச் செயற்பாட்டை வினைத்திறனுடன் அதி கூடியதாக ஆக்கவல்ல புதிய யுகத்தின் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய செயற்பாட்டை மேற்கொள்ளும் ஏனைய சுத்திகரிப்புகளுடன் ஒத்துப்பார்க்கையில் இச்சுத்திகரிப்பு ஆலையானது மிகக் குறைந்த வினைத்திறனுடன் செயற்படுகின்றது. எவ்வாறாயினும், கிரயமானது பயனுள்ளவாறு பயன்படுமாறு பெற்றோலிய உற்பத்தியை சந்தையில் வழங்குவது உறுதிப்படுத்தப்படுவதற்காக சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்தகரிப்பு ஆலையை விரிவடையச் செய்வதும் நவீனமயப்படுத்தலுக்குமான செயற்திட்டம் (SOREM) 2016 ஜூலை 15 வரை அமுலாக்கப்பட்டிராததுடன், செயற்திட்டத்தைத் துரிதமயமாக்குவதற்கு 2016 மே 10 ஆந் திகதியன்று அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதியன்று அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தார்.

**(ஆ) நாட்டினூடாக குழாய் மார்க்கச் செயற்திட்டம்**

---------------------------------------------------------------------------------------

கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னாவ பெற்றோலிய களஞ்சியச்சாலை வரை இறக்குமதி செய்யப்பட் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், எண்ணெய் போன்ற பெற்றோலிய உற்பத்திகளை அனுப்பிவைப்பதற்கு பல தசாப்தங்களுக்கு முன்பாக நிறுவப்பட்ட குழாய்ப்பாதை புதுப்பிக்கப்பட முடியாத நிலையில் உள்ளமையால், ஏற்கனவே கைவிடப்பட்டவாறுள்ளது. இறக்குமதி செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளுள் பெரும்பாலானவை இப்பாதிப்புக்குள்ளான குழாய்ப் பாதையினூடாக கொலன்னாவ எரிபொருள் களஞ்சியச்சாலைக்கு அனுப்பப்படுவதால் அவற்றைப் புதுப்பிப்பதும் நவீனமயப்படுத்தலும் துரிதமாகச் செய்யப்பட வேண்டியிருந்தது. ''நாட்டினூடாக குழாய் மார்க்கச் செயற்திட்டம்'' அமுலாக்கப்படுவதற்கு 2008 முதல் அவ்வப்போது அமைச்சரவைத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இம்முழுச் செயற்திட்டமும் பொறியியல் கொள்வனவு மற்றும் நிர்மாண வேலை நடவடிக்கை ஒப்பந்தகாரர்களால் மேற்கொள்ளப்படும் அடிப்படையில் (EPC TURNKEY CONTRACT) அடிப்படையில் 100 சதவீதம் நிதியளிக்கப்படும் அரசாங்கத்திற்கு அரசாங்கம் (GTO G) கொள்வனவு நடைமுறையின் கீழ் அமுலாக்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்ததாகவும், குறித்த வெளிநாட்டுத் தூதுக் குழுவினரால் பரிந்துரைக்கப்படும் ஒரு பரிபூரண யோசனையை மாத்திரம் குறித்த 04 நாடுகளிலிருந்தும் கோருவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்ததாகவும், இதன் பொருட்டுச் செயற்திட்ட யோசனைகளைக் கோருவதற்குத் (RFP-REQUEST FOR PROPOSAL) தேவையான யோசனைகளைத் தயாரித்து, இலங்கை பெற்றோலியக் களஞ்சியச்சாலைக் கம்பனியால் தொழில்நுட்ப பதிப்பாய்வுக் குழுவிற்கு (TEC) அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அக் குழுவிடமிருந்து அமைச்சிற்குச் செயற்திட்ட யோசனை பெறப்பட்டதன் பின்னர் குறித்த நாடுகளின் மூலம் யோசனைகளைக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதியன்று இது தொடர்பாக அமைச்சின் செயலாளர் எனக்கு அறிவித்திருந்தார்.

**(இ) திருகோணமலை எண்ணெய்த் தாங்கிப் பல் கூட்டுத்தொகுதி**

---------------------------------------------------------------------------------------

இயலளவு 12,500 கனமீட்டர் (10000 மெற்றிக்தொன்) ஆற்றலுடைய 100 எண்ணெய்த் தாங்கிகளுடனும் 1930 ஆம் ஆண்டில் திருகோணமலை எண்ணெய்த்தாங்கிப் பல்கூட்டுத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த எண்ணெய்த் தாங்கிப் பல்கூட்டுத் தெகுதி 1961 ஆம் ஆண்டின்போது இலங்கை அரசாங்கத்தினது கோரிக்கையின் பேரில் அச்சமயம் இதன் உரித்து பெற்றிருந்த பிரித்தானிய அரசினால் காணி, எண்ணெய்த் தாங்கிப் பல்கூட்டுத்தொகுதி, கட்டிடங்கள் மற்றும் ஏனைய வசதிகள் தொடர்பான உரித்தை 1964 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போதுள்ள மொத்த எண்ணிக்கையிலான 99 எண்ணெய்த் தாங்கிகளுள் 14 இலங்கை இந்திய எண்ணெய் கம்பனியால் பயன்படுத்தப்பட்டவாறுள்ளது. கைவிடப்பட்ட நிலையில் இருந்த மற்றைய தாங்கியை அபிவிருத்தி செய்வதற்கு 2015 ஏப்ரல் 29 ஆந் திகதியன்று 06 அங்கத்தவர்களைக் கொண்ட ஒருங்கிணைந்த செயலணிப்படை நிறுவப்பட்டிருந்தது. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சின் செயலாளர் 2016 ஜூன் 06 ஆந் திகதியன்று மாண்புமிகு பிரதம மந்திரி திருகோணமலை எண்ணெய்த் தாங்கிப் பல்கூட்டுத்தொகுதியின் உயர் பகுதியினது செயற்பாட்டை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனி என்பவற்றால் உடன்பாட்டிற்குள்ளான ஒருங்கிணைந்த வர்த்தகத்திடம் கையளிப்பதற்கான அமைச்சரவைக் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாக அறிவித்திருந்தார். அதற்கமைய, பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரால் 2016 ஏப்ரல் 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட ''இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் திருகோணமலை எண்ணெய்த் தாங்கிப் பல்கூட்டுத் தொகுதியின் உயர் பகுதியினது

புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி செய்தல்'' எனும் குறிப்பின் வாயிலாக அமைச்சரவைக் குறிப்புடன் அமைச்சரவைத் தீர்மானத்தை இரத்துச் செய்வதற்கும் 84 தாங்கிகளைக் கொண்ட திருகோணமலை எண்ணெய்த் தாங்கிப் பல்கூட்டுத் தொகுதியின் உயர் பகுதியினது செயற்பாடு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனி என்பவற்றால் உடன்பாட்டிற்குள்ளான ஒருங்கிணைந்த வர்த்தகத்திடம் ஒப்படைக்கப்படுவதற்கும் கால அட்டவணையின் அடிப்படையிலமைந்த செயல் திட்டத்தின் பிரகாரம் ஒரு தடவையில் 30 தாங்கிகள் வீதம் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் மாண்புமிகு பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மாண்புமிகு அபிவிருத்தி உபாயமார்க்க மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மற்றும் ஏனைய தொடர்புடைய அதிகாரிகள் ஆகியோருடன் ஒருங்கிணைந்து மேற்படி விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காகப் பொருத்தமான நடைமுறையைத் தீர்மானித்து அது தொடர்பாக மாண்புமிகு அமைச்சரவைக்குத் தெரிவிக்குமாறு மாண்புமிகு பிரதி மந்திரியிடம் வேண்டிக்கொள்ளுமாறு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளதாகவும் 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதியன்று அறிவித்திருந்தது.

**(ஈ) பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பூமியின் அடியிலான எண்ணெய்க் குழாய் முறைமை**

---

மேற்படி பூமியின் அடியிலான எண்ணெய்க் குழாய் முறைமையை ரூபா 1,000 மில்லியன் செலவில் நிர்மாணிப்பதற்கு 2010 ஆம் ஆண்டில் ரூபா 5 மில்லியன் செலவு செய்து தொழில்நுட்ப ஆய்வும் 2012 ஆம் ஆண்டில் ரூபா 01 மில்லியன் செலவில் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய கொள்வனவுகளது விரிவான திட்டமும் தயாரிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், விமான நிலையத்தின் 06 மில்லியன் வருடாந்த பயணிகள் போக்குவரத்தை உயர்த்துவதற்கான செயற்திட்ட யோசனையை இரத்துச் செய்து அதனை வருடாந்தம் 09 மில்லியன் வரை அதிகரிப்பதென 2013 செப்டம்பர் 05 ஆந் திகதி அமைச்சரவை முடிவுசெய்தது. அதற்கமைய, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொள்ள இருந்த பூமியின் அடியிலான எண்ணெய்க் குழாய் முறைமையினது நோக்கெல்லையும் மாற்றஞ் செய்யப்பட வேண்டியதாயிற்று. இச் செயற்திட்டமானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் விமான நிலைய மற்றும் விமான சேவைக் கம்பனி எனும் இரு நிறுவனங்களாலும் இணைந்தே அமுலாக்கப்பட வேண்டிய செயற்திட்டம் என்றும், நிதி வழங்குதலில் சிக்கல் உள்ளதால் நிதி வசதிகளுடனான கூறு விலைகளைக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கூறு விலைகளைப் பகுப்பாய்வு செய்யும் வேலை இறுதிக் கட்டத்தில் உள்ளதாகவும் 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதியன்று அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தார்.

## 3.10 செயலாற்றல்

---

எண்ணெய்ப் ஆய்வு நடவடிக்கைகளால் சுற்றாடலுக்கும் நீருக்கும் ஏற்படும் பாதிப்பு தொடர்பான கணிப்பீட்டு நடவடிக்கைகளின் பொருட்டு பெற்றோலிய வள அபிவிருத்திச் செயலகத்திற்கு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 50 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் இச்செயற்திட்டம் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது சம்பந்தமான வழங்கலது நிதிக்கான யோசனையை ஆரம்பிக்கையில் பிரச்சினைகள் உருவாகியதால் அவ்வழங்கல் இரத்துச் செய்யப்பட்டு செயற்திட்டத்தினது நோக்கெல்லையை விரிவுபடுத்தி நாரா (NARA) நிறுவனத்திடமிருந்து புதிய கூறு விலைகளைப் பெற்று அச்செயற்திட்டத்தை நாரா நிறுவனத்திடம் வழங்குவதற்கான ஆலோசனை அமைச்சின் செயலாளரிடமிருந்து பெறப்பட்டிருந்தது, அதற்கமைய, 2015 திசெம்பர் 31 ஆந் திகதியன்று உடன்படிக்கை கைச்சாத்தாகி ஆரம்ப முற்பணமாக ரூபா 7,433,106 வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கைப் பிரகாரம் 08 மாதத்தின் போது, அதாவது, 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதிக்கு

முன்பு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டபோதும் கணக்காய்வுத் தினமான 2016 ஆகஸ்ட் 19 அன்றும் குறிப்பிடத்தக்க செயல் முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை.

**3.11 நட்டங்களும் இழப்புகளும்**

2015 ஆம் ஆண்டின்போது அமைச்சின் 10 வாகனங்கள் திடீர் விபத்துக்குள்ளாகியதுடன், அவற்றைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா 530,498 செலவாகியுமிருந்தது. அவ்வாறிருக்க, அதற்கான காப்புறுதி இழப்பீடாக ரூபா 395,446 மாத்திரமே பெறப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சிற்கு ஏற்பட்ட ரூபா 135,052 இழப்பு தொடர்பாக தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.12 முகாமைத்துவ நலிவுகள்**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தால் சிங்கப்பூரில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொண்ட 2 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,231,864 செலவிடப்பட்டிருந்தது. அச் செலவினமானது 2015 ஆம் ஆண்டில் அமைச்சின் பதவியணியைப் பயிற்றுவிக்கும் செலவின விடயத்தின் கீழான மொத்த நிதியேற்பாட்டின் 61 சதவீதமாகும்.

(ஆ) ‘‘அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சூரிய சக்தியைப் பயன்படுத்தல்’’ எனும் எரிசக்திக்கான மாற்றீட்டுத் தோற்றுவாய் தொடர்பாக 2015 ஜூன் 18 முதல் ஆகஸ்ட் 12 வரை 55 நாட்கள் சீனாவில் நடைபெற்ற பயிற்சிக் கற்கை நெறியில் அத்துறையுடன் தொடர்பற்ற அமைச்சின் பெண் சட்ட உத்தியோகத்தர் ஒருவரைப் பங்குபற்றச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு அவருக்காக பொருட்டு அமைச்சினால் மீளாய்வாண்டின்போது ரூபா 187,070 செலவழிக்கப்பட்டுமிருந்தது. இப்பதவி திணைக்கள ரீதியான பதவி ஆகையால், இப்பெண் உத்தியோகத்தர் இத்துறையின் உடன்படிக்கை மற்றும் சகல சட்டரீதியான நடவடிக்கைகளில் பணிபுரிவதுடன் அதன் நிமித்தம் இத்துறை சம்பந்தமான அறிவைப் பெறுவதற்கு கடமைக்கு சிறந்த உறுதுணையாக அமையும் என்பதால் அவ்வெளிநாட்டுப் பயிற்சியில் அவரைக் கலந்து கொள்ளச் செய்வதாகவும், அவருக்கான படிகளையும் விசாக் கட்டணத்தையும் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக அமைச்சின் செயலாளர் 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதி தெரிவித்திருந்தார்.

(இ) 2015 ஆகஸ்ட் 01 ஆந் திகதியன்று நடைபெற்ற சாரதிகளின் பயிற்சிச் செயலமர்வின்போது ஒருவருக்கு ரூபா 3,500 வீதம் 30 சாரதிகளுக்கு அமைச்சினது நிதியேற்பாட்டின் கீழ் நிர்மாணவேலை இயந்திர சாதனப் பயிற்சி நிலையத்திற்கு ரூபா 105,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அமைச்சின் எந்தவொரு சாரதியும் இதில் பங்குபற்றியிருக்கவுமில்லை. பங்குபற்றாத சாரதிகளின் சம்பளத்திலிருந்து அப்பயிற்சிக் கற்கை நெறிக் கட்டணம் அறவிடப்பட்டிருக்காததுடன், வெளி நிறுவனங்களிலிருந்து பங்குபற்றிய சாரதிகளின் பொருட்டுச் செலவழிக்கப்பட்ட பணத்தை அந்நிறுவனங்களிடமிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, அமைச்சினது உத்தியோகத்தர்களது பயிற்சிக்கென ஏற்பாடு செய்யப்பட்ட நிதி வெளி நிறுவனங்களது உத்தியோகத்தர்களின் பொருட்டுப் பயன்படுத்தப்பட்டதால் அமைச்சினது உத்தியோக்தர்களது பயிற்சிக்கான சந்தர்ப்பம் நழுவியிருந்தது.

(ஈ) இலங்கை மன்றத்துடன் இணைந்து 2015 ஆம் ஆண்டின் போது மலேசியாவில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றில் கலந்து கொண்ட மேலதிகச் செயலாளரின் (நிர்வாகம்) பொருட்டு அமைச்சினால் ரூபா 516,181 செலவிடப்பட்டிருந்தது. தீவிலிருந்து வெளியேறிய மற்றும் மீண்டும் திரும்பிவந்த நாட்கள்

சம்பந்தமான விமானச் சீட்டின் பிரதிகள், 2013 ஏப்ரல் 16 ஆந் திகதிய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு வளத் திணைக்களத்தினது எச்ஆர்டி/டீஎச்ஐ/எஸ்/194 ஆம் இலக்கக் கடிதத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையின் பிரதி ஒன்று, பெறப்பட்ட பயிற்சி தொடர்பான விபரமடங்கிய அறிக்கை, பயிற்சிச் சான்றிதழ் போன்ற கற்கைநெறியில் கலந்து கொண்டமையை உறுதி செய்யும் சான்றுகள் அமைச்சில் இருக்கவில்லை. மேலும், கடந்த சில ஆண்டுகளாகவே இப் பெண் உத்தியோகத்தர் அமைச்சின் பதவியணியினரது பயிற்சிக்கான செலவின விடயத்தின் தொகையைப் பயன்படுத்தியவாறு இவ்வாறான மாநாடுகளில் தொடர்ந்து பங்குபற்றியிருந்ததுடன், அது சம்பந்தமாக அவ்வப்போது கணக்காய்வு ஐய வினாக்களும் வழங்கப்பட்டிருந்தன.

## 3.13 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 16 | 08 | 08 | - |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 02 | 01 | 01 | - |
| (iii) | இரண்டாந்தர மட்டம் | 52 | 35 | 17 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 27 | 21 | 06 | - |
| (v) | ஏனையவை (சமயாசமய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 05 | - | 05 |
| | மொத்தம் | 97 | 70 | 32 | 05 |